பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
19 05 2025 MONDAY 7.15 PM
ஆகாஷவாணி

தலைப்புச் செய்திகள்

- வெளிநாடுகளில் வசிக்கும் இந்திய வம்சாவளியை சேர்ந்தவர்களுக்கான புதிய இணையதள சேவையை உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா, புதுதில்லியில் இன்று தொடங்கிவைத்தார்.
- இந்தியா – நெதர்லாந்து இடையேயான இருதரப்பு பேச்சுவார்த்தைகள் ஆக்கப்பூர்வமாக அமைந்தது என்று வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.
- நாட்டின் தலைசிறந்த நிர்வாக நடைமுறைகள் கூட்டாட்சி அமைப்பிற்கு வலு சேர்ப்பதாக மத்திய இணையமைச்சர் திரு ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.
- தீவிரவாதத்தை ஒடுக்குவதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாக மத்திய நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜு தெரிவித்துள்ளார்.
- நான்கு நாடுகளுக்கு இடையேயான மகளிர் ஜூனியர் ஹாக்கிப் போட்டியில் பங்கேற்பதற்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

--இனி விரிவான செய்திகள்--

<<<<<>>>>>>

வெளிநாடுகளில் வசிக்கும் இந்திய வம்சாவளியை சேர்ந்தவர்களுக்கான புதிய இணைய சேவையை உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா, புதுதில்லியில் இன்று தொடங்கிவைத்தார்.

இந்த புதிய இணையதளம் ஏற்கனவே உள்ள குறைபாடுகளுக்கு தீர்வுகாணும் வகையிலும், பயனாளர்களின் அனுபவத்தை மேம்படுத்தும் வகையிலும் தொடங்கப்பட்டுள்ளதாக உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

நவீன தொழில்நுட்பத்துடன் இந்த இணையதளம் மேம்படுத்தப்பட்டுள்ளதாக அந்த அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<<>>>>>>

இந்தியா – நெதர்லாந்து இடையேயான இருதரப்பு பேச்சுவார்த்தைகள் ஆக்கப்பூர்வமாக அமைந்தது என்று வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், இருதரப்பு வர்த்தக நடைமுறைகளை மேலும் வலுப்படுத்துவது குறித்து விரிவாக ஆலோசனை நடத்தியதாக கூறியுள்ளார்.

நெதர்லாந்து, டென்மார்க், ஜெர்மனி ஆகிய ஐரோப்பிய நாடுகளுக்கு அரசு முறைப்பயணம் மேற்கொண்டுள்ள அவர், தமது பயணத்தின் முதல்கட்டமாக இன்று நெதர்லாந்து சென்றடைந்தார்.

இந்த பயணத்தின்போது, மூன்று நாடுகளை சேர்ந்த தலைவர்களை சந்தித்து பேச்சு நடத்த உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த பேச்சுவார்த்தையில் இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவது குறித்தும், பிராந்திய மற்றும் சர்வதேச விவகாரங்கள் குறித்தும் விவாதிக்க உள்ளதாக திரு ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

<<<<<>>>>>>

நாட்டின் தலைசிறந்த நிர்வாக நடைமுறைகள் கூட்டாட்சி அமைப்பிற்கு வலு சேர்ப்பதாக உள்ளது என்று மத்திய இணையமைச்சர் திரு ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில், நாடு முழுவதும் பணியில் உள்ள குடிமைப்பணி அதிகாரிகளின் விவரங்கள் அடங்கிய மின்னணு புத்தகத்தை அவர் வெளியிட்டார்.

குடிமைப்பணி அதிகாரிகளின் சேவை சிந்தனையாளர்களை தொடர்ந்து ஈர்த்து வருவதாக அவர் குறிப்பிட்டார்.

இந்த மின்னணு பட்டியலில் இடம்பெற்றுள்ள தகவல்களை அறிந்துகொள்வதில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

<<<<<>>>>>>

வளர்ச்சியடைந்த இந்தியா இயக்கத்திற்கு உத்வேகம் அளிக்கும் வகையில், வேளாண் உற்பத்தியை அதிகரிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பல்வேறு மாநிலங்களை சேர்ந்த வேளாண் அமைச்சர்களுடன் அவர் காணொலி மூலம் கலந்துரையாடினார்.

மாநில அரசுகளுடன் இணைந்து மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் வேளாண் துறையில் புதிய மாற்றத்தை ஏற்படுத்தும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

ஒரே நாடு – ஒரே குழு – ஒரே விவசாயம் என்ற உணர்வுடன் மாநில அரசுகள் வேளாண் துறையை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று திரு சிவ்ராஜ் சிங் சௌகான் வலியுறுத்தினார்.

<<<<<>>>>>>

மின்னணு வர்த்தகத்தில் உலகின் மிகப்பெரிய தளமாக மத்திய அரசின் மின்னணு சந்தை உருவெடுத்துள்ளதாக அதன் தலைமை செயல் அதிகாரி திரு 'Mihir Kumar ' தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில், இந்த மின்னணு தளத்தின் எட்டாவது நிறுவன தினத்தையொட்டி செய்தியாளர்களிடம் பேசிய அவர், பொதுத்துறை கொள்முதல் நடவடிக்கைகளுக்கு உகந்த தளமாகவும், குறைவான விலையில் அனைவராலும் அணுகக்கூடிய வகையில் இந்த தளம் புதிய சாதனை படைத்துள்ளதாக தெரிவித்தார்.

இந்த மின்னணு சந்தைக்கான இணையதளத்தில் பத்து லட்சத்திற்கும் மேற்பட்ட குறு-சிறு, நடுத்தர தொழில நிறுவனங்கள் ஒன்று புள்ளி மூன்று லட்சம் கைவினைக்கலைஞர்கள் மற்றும் நெசவாளர்களும், ஒன்று புள்ளி எட்டு நான்கு லட்சம் மகளிர் தொழில் முனைவோர்களும், 31 ஆயிரம் புத்தொழில் நிறுவனங்களும் பதிவு செய்துள்ளதாக அவர் கூறினார்.

கடந்த எட்டாண்டுகளில் பொதுத்துறை நிறுவனங்களின் கொள்முதல் நடவடிக்கைகளில் முன்எப்போதும் இல்லாத வகையில் புதிய உச்சத்தை எட்டியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த மின்னணு சந்தை வாயிலாக 97 சதவீத பரிவர்த்தனைகள், வர்த்தக கட்டணம் ஏதும் இன்றி மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

இந்த மின்னணு சந்தையை நாடு முழுவதும் 36 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் செயல்படுத்தப்பட்டு வருவதாக திரு 'Mihir Kumar தெரிவித்தார்.

<<<<<>>>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி அகில இந்திய வானொலியில் மக்களிடையே மனம் திறந்துபேசும் மன் கி பாத் நிகழ்ச்சி இம்மாதம் 25-ஆம் தேதி ஒலிபரப்பாகவுள்ளது.

மாதந்தோறும் இறுதி ஞாயிற்றுக்கிழமைகளில் ஒலிபரப்பாகும் இந்நிகழ்ச்சியில், இடம்பெறும் கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளை கட்டணமில்லா தொலைபேசி எண்ணில் தெரிவிக்குமாறு பிரதமர் அலுவலகம் கேட்டுக்கொண்டுள்ளது.

மக்கள் தங்களது கருத்துக்களை நமோ செயலி மற்றும் 'mygov ' வாயிலாகவும் தெரிவிக்கலாம்.

இம்மாதம் 23-ஆம் தேதிவரை கிடைக்கப்பெறும் கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும் என்றும் பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

<<<<<>>>>>>

தீவிரவாதத்தை ஒடுக்குவதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாக மத்திய நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜு தெரிவித்துள்ளார்.

ஜம்மு காஷ்மீரில் உள்ள லே-யில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பேசிய அவர், மத்திய அரசால் அமைக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொண்ட குழுக்கள் பல்வேறு நாடுகளின் தலைவர்களை சந்தித்து ஆபரேஷன் சிந்தூர் குறித்து விரிவாக எடுத்துரைக்க உள்ளதாக கூறினார்.

பாகிஸ்தானால் ஊக்குவிக்கப்படும் தீவிரவாதிகளின் முகாம்களை அழிக்கும் வகையில் ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

முன்னதாக, இந்நிகழ்ச்சியில், லடாக்கை சேர்ந்த ஆன்மிகவாதியும், அரசியல் கட்சித்தலைவருமான Kushok Bakula Rinpochey –ன் சிலையை திறந்துவைத்தார்.

<<<<<>>>>>>

உயர்நீதிமன்ற நீதிபதிகள் மற்றும் கூடுதல் நீதிபதிகள் முழு ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதியப் பலன்களை பெற உரிமை உள்ளதாக உச்சநீதிமன்றம் தீர்ப்பு அளித்துள்ளது.

இதுதொடர்பான மனுவினை விசாரணை செய்த தலைமை நீதிபதி திரு B R Gavai தலைமையிலான அமர்வு இன்று இதற்கான உத்தரவினை பிறப்பித்தது.

உயர்நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதிகள் ஓய்வூதியமாக வருடத்திற்கு 15 லட்சம் ரூபாய் பெறுவார்கள் என்று அந்த உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கூடுதல் நீதிபதிகளாக நியமிக்கப்பட்டு ஓய்வு பெற்றவர்களுக்கும் இது பொருந்தும் என்றும் அந்த தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>>>

தமிழகத்தின் தூத்துக்குடி மாவட்டம் உடன்குடி அனல் மின் நிலையத்தின் முதலாவது அலகில் மின் உற்பத்தி ஆறு மாத காலத்திற்குள் தொடங்கும் என்று மத்திய அரசின் ஊரக மின்மயமாக்கல் நிறுவனத்தின் இயக்குனர் திரு நாராயணன் திருப்பதி கூறியுள்ளார்.

இன்று உடன்குடியில் இப்பணிகளை ஆய்வு செய்த பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

*(சவுண்ட் பைட் - லஷ்மணன் - 42 செகண்ட்ஸ்)*

<<<<<>>>>>>

கர்நாடகாவில் பெய்த கனமழை காரணமாக பெண் ஒருவர் உயிரிழந்தார்.

பெங்களுருவின் பல்வேறு பகுதிகள் வெள்ளத்தால் சூழப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதன் காரணமாக வாகனங்கள் வெள்ள நீரால் சூழ்ந்தாகவும் அவர் கூறுகிறார்.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிவாரணப்பணிகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சாலைகளில் விழுந்த மரங்களும் அகற்றப்பட்டு வருவதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

<<<<<>>>>>>

விளையாட்டுச் செய்திகள்

நான்கு நாடுகளுக்கு இடையேயான மகளிர் ஜூனியர் ஹாக்கிப் போட்டியில் பங்கேற்பதற்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

Nidhi தலைமையிலான இந்த அணியில் 24 பேர் இடம்பெற்றுள்ளனர்.

அர்ஜென்டினா, உருகுவே, சிலி ஆகிய அணிகள் இதில் பங்கேற்கின்றன.

இப்போட்டி வரும் 25 ஆம் தேதி தொடங்கி அடுத்த மாதம் 2 ஆம் தேதிவரை நடைபெறவுள்ளது.

---------------

Macedonia சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Manas Dhamne பிரதான சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதி தகுதிச்சுற்று ஆட்டத்தில் அவர், 6-3, 7-5 என்ற செட் கணக்கில், செக் குடியரசின் Martin Krumich–ஐ வென்றார்.

-------------

ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டியில் இந்தியா பங்கேற்காது என்று வெளியான தகவல் உண்மை அல்ல என்று கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் கூறியுள்ளது.

-----------

கேலோ இண்டியா பீச் விளையாட்டுப்போட்டிகள் இன்று Diu-வில் தொடங்கின.

வரும் 24 ஆம்தேதி வரை நடைபெறவுள்ள இந்தப் போட்டிகளில் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பங்கேற்றுள்ளனர்.

கபடி, கால்பந்து உள்ளிட்ட 6 பிரிவுகளில் போட்டிகள் நடைபெறுகின்றன.

<<<<<END>>>>>>